**தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவு மற்றும் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பரில் அதிமேதகு சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கைகளுக்கான பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், அறிவிக்கப்பட்ட கொள்கைகள் தொடர்பான 10 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களினை தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் அவ்வவ்போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் 5 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொதுக் கல்வி தொடர்பான தேசிய கொள்கை 2017 திசெம்பரில் அதிமேதகு சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அது தேசியக் கொள்கையொன்றாக இதுவரை அறிவிக்கப்பட்டிருக்காமையால், திட்டமிடப்பட்டவாறு தேசிய அல்லது மாகாண மட்டங்களுடன் தொடர்புடைய விழிப்புணர்வு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்துவதற்கான எவ்வித சந்தர்ப்பமும் காணப்படவில்லை. |
| (ஆ) | உயர்கல்வி தொடர்பான கொள்கை முன்மொழிவுகளின் உருவாக்கத்திற்காக ரூபா 5,220,000 ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 4,656,645 தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. கொள்கைகளுக்கான பரிந்துரைகள் உள்ளடங்கலாக பரீட்சிப்பு அறிக்கை 2019 மே 10 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உயர்கல்வி தொடர்பான கொள்கை முன்மொழிவின் தொடர்ச்சியானதொரு தயாரிப்புடன் தொடர்புடைய 08 ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பான இறுதி அறிக்கையின் அடிப்படையில் இறுதி அறிக்கை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கற்கைகள் தொடர்பான குறித்த அறிக்கைகள் பிரசுரிக்கப்பட வேண்டுமென வேண்டப்படாமையினால், எட்டு ஆராய்ச்சி கற்கைகளின் அறிக்கைகள் மும்மொழிகளில் அச்சிடப்பட்டிருக்கவில்லை. இறுதி கொள்கை அறிக்கை, அவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றதுடன், மூன்று மொழிகளில் எட்டு ஆராய்ச்சி |

| | | |
|---|---|---|
| | | கற்கைகளின் அறிக்கைகளினை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 இன் 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதி ஆண்டு முடிவடைந்த பின்னர் 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய செயலாற்றல் அறிக்கையினை ஆணைக்குழு சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும், 2019 மே 01 வரையிலும் பாராளுமன்றத்தில் 2014 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான அறிக்கைகளினை ஆணைக்குழு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2002 செப்தெம்பர் 12 இன் 402 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த ஆணைக்குழுவுடன் தொடர்புடைய 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் மற்றும் கட்டுப்பாட்டு அறிக்கைகள் 13.02.2019 திகதியிடப்பட்டிருக்கின்றதுடன், பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக சனாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய கணக்காய்வு அறிக்கை உரிய நேரத்தில் பெறப்பட்டிருக்காமையினால், 2017 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை மற்றும் கட்டுப்பாட்டு அறிக்கையை அந்தத் தினத்தில் சமர்ப்பிக்க முடியாதிருந்தது. |

**2.3 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய பிரதான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட பெறுகை ரூபா 1,327,000 பெறுமதியாகக் காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் பெறுகைகளுக்காக ரூபா 802,772 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அரச பெறுகை வழிகாட்டல்களின் 4.2.1 ஆம் வழிகாட்டலின் (ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் காணப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் அது மேற்கொள்ளப்படும். |
| (ஆ) அரச பெறுகை வழிகாட்டல்களின் 5.3.1 ஆம் வழிகாட்டலின் (அ) மற்றும் (ஆ) வழிகாட்டல்களின் பிரகாரம், நியம விலைமனு ஆவணங்கள் | - மேற்படி - | - மேற்படி - |

பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரச பெறுகை வழிகாட்டல்களின் 2.11.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக் கூட்டங்களின் கூட்டக்குறிப்புக்கள் மற்றும் பெறுகை குழு கூட்டங்களின் அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**3. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெற்றிடமாகக் காணப்பட்ட கணக்காளர் பதவிக்காக உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2019 மே 10 அளவில் விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டிருந்தபோதிலும், நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தடங்களின்றி ஆணைக்குழுவின் விவகாரங்களினை மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் பதவியிலுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டதன் பிரகாரம், நேர்முகப் பரீட்சைகளினை நடாத்துவதற்கு மற்றும் மேலும், முன்செல்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. |
| (ஆ) | சிரேஷ்ட கொள்கை ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் இரண்டு பதவிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்திருந்த போதிலும், உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்பதற்கு 2019 மே 10 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 11 ஏனைய அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. | - மேற்படி - | அனைத்து பதவிகளுக்குமான வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களினை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும், சிரேஷ்ட கொள்கை ஆராய்ச்சி உத்தியோகத்தரொருவர் மற்றும் 02 அபிவிருத்தி உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2019.04.02 ஆந் திகதிய செய்தித்தாள் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் சிரேஷ்ட கொள்கை ஆராய்ச்சி உத்தியோகத்தரின் பதவிக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு இடையேயிருந்து, தகைமைகளின் பிரகாரம், இரண்டு வேட்பாளர்களுக்காக நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டிருந்தது. நேர்முகப் பரீட்சை சபையின் பரிந்துரைகளின் பிரகாரம், உத்தியோகத்தரொருவரின் ஆட்சேர்ப்புகளிற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு குறிப்புரைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. |